# சிங்கள மன்னராட்சியில் சோழர்கால இந்துக்கோயில்களும், பண்பாடும் : பொலன்னறுவை இராசதானியை அடிப்படையாகக் கொண்ட ஆய்வு

[1]திருமதி அனித்தா சசிகரன்

[1]விரிவுரையாளர், வரலாற்றுத்துறை, யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்

yaniththaaa@gmail.com

**ஆய்வுச் சுருக்கம்**

*இலங்கையில் இந்துசமயமானது வரலாற்றுக்கு முற்பட்ட காலத்திலிருந்தே வளர்ச்சி பெற்றிருந்ததை தொல்லியல் சான்றுகள் உறுதிப்படுத்துகின்றன. இதனை உறுதிப்படுத்தும் தொன்மைச் சான்றுகளாக, தமிழகத்தைப் போன்று இலங்கைப் பெருங்கற்காலப் பண்பாட்டு மையங்களில் கண்டுபிடிக்கப்பட்ட சுடுமண் தெய்வச்சிலைகள், சிற்பங்கள், சமயச்சின்னங்கள் என்பன காணப்படுகின்றன. அறிஞர்கள் சிலர் இவற்றை இந்து மதத்திற்கு முன்னோடியாக (Proto Hinduism) வழக்கில் இருந்த வழிபாட்டுச் சின்னங்கள் எனக்கூறுகின்றனர். கி.பி. 6ஆம் நூற்றாண்டிலிருந்து தமிழகத்தைப் போன்று இலங்கையிலும் ஆகமமரபு சாராத வழிபாட்டுச் சின்னங்கள், கிராமிய ஆலயங்கள் பல ஆகமமரபின் செல்வாக்கிற்கு உட்பட்டது. இதற்கு அநுராதபுரத்தில் கண்டுபிடிக்கப்பட்ட பல்லவர்காலத் திராவிடக் கலைமரபில் கட்டப்பட்ட ஆலயங்கள், அவற்றில் வைத்து வழிபடப்பட்ட தெய்வச்சிலைகள், சிற்பங்கள் சிறந்த சான்றுகளாகும். கி.பி 10, 11ஆம் நூற்றாண்டிலிருந்து சோழ அரசு கடல்சார்ந்த பேரரசாக எழுச்சி பெற்றபோது அவ்வரசின் ஆதிக்கம் தென்னிந்தியாவின் இயற்கை எல்லையைத் தாண்டி இலங்கை உட்பட்ட தென்கிழக்காசிய நாடுகள் வரை பரவியது. இதனால் தென்னிந்தியாவில் சோழர் ஆட்சியில் ஏற்பட்ட சமய, கலாசார மறுமலர்ச்சியின் செல்வாக்கு சமகாலத்தில் அவர்களின் அரசியல், வர்த்தக ஆதிக்கம் நிலவிய பிறநாடுகளிலும் பிரதிபலித்தது. இப்பின்னணியிலே இலங்கையிலும் தமிழகத்தைப் போன்று பல இந்துக்கோயில்கள் சோழ ஆட்சியாளர்கள், நிர்வாகிகள், வணிகர்கள் முதலியோரால் அமைக்கப்பட்டன. அவற்றுள் பெரும்பாலானவை அரச தலைநகரங்கள், துறைமுகப்பட்டினங்கள், வணிகமையங்கள் என்பவற்றை மையமாகக் கொண்டு அமைக்கப்பட்டதுடன் அக்கோயில்களின் நிர்வாகம், ஆலய உற்சவங்கள், ஆராதனைகள் என்பனவும் பெரும்பாலும் சமகாலத்தில் தென்னிந்திய கோயில் நடைமுறைகளை ஒத்ததாகவே ஏற்பாடு செய்யப்பட்டிருந்தன. சோழராட்சிக்குப் பின்னர் சிங்கள மன்னர்களின் ஆட்சி பொலன்னறுவையில் ஏற்பட்ட போதும் சோழர்கால கோயில்களும், அவைசார்ந்த பண்பாடும் சிங்கள மன்னர்களின் ஆட்சியிலும் வளர்ச்சியடைந்திருந்ததற்கு சில சான்றுகள் காணப்படுகின்றன. ஆயினும் கி.பி. 13ஆம் நூற்றாண்டில் பொலநறுவை இராசதானி கைவிடப்பட்டு அவ் இராசதானி இருந்த இடம் காடாக மாறியமை, இயற்கையின் தாக்கம், ஐரோப்பியரது கிறிஸ்தவ மதப்பரப்பல், கலையழிவுக் கொள்கை முதலான காரணங்களால் இந்துக்கோயில்கள் பல அழிவடைந்து அவை மண்ணுக்குள் மறைந்து விட்டன. இதனால் இந்துமதத்தின் தொடர்ச்சியான வரலாறு, அம்மதம் சார்ந்த கோயில்கள், அவற்றின் பண்பாட்டுச் சின்னங்கள் என்பவற்றை பெருமளவுக்கு அறிந்து கொள்ள முடியவில்லை. இந்நிலையில் இலங்கையில் அதிலும் குறிப்பாக பொலன்னறுவையில் மேற்கொள்ளப்பட்ட தொல்லியல் ஆய்வுகளால் அழிவடைந்த கோயில்களின் கட்டிடப்பாகங்கள், சிற்பங்கள், சிலைகள், செப்புத்திருமேனிகள், ஆலயப்பொருட்கள், கல்வெட்டுக்கள் என்பன கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. அவை பொலன்னறுவை இராசதானி காலத்தில் இருந்த கோயில்களை கால அடிப்படையில் ஆராய்வதற்கு நம்பகரமான புதிய சான்றுகளாகக் காணப்படுகின்றன. அவற்றை ஆதாரமாகக் கொண்டு பொலநறுவை இராசதானிகாலச் சிங்கள மன்னராட்சியில் சோழர்கால கோயில்களின் நிலையை ஆராய்வது இவ்வாய்வின் கருப்பொருளாகும். இவ்வாய்வு முதன்மைச் சான்றுகளான இலக்கியங்கள், கல்வெட்டுக்கள், தொல்லியல் அகழ்வாய்வுகளில் கண்டுபிடிக்கப்பட்ட தொல்லியல் சான்றுகள், களஆய்வு அறிக்கைகள் என்பவற்றையும், இரண்டாம் நிலைத்தரவுகள் என்ற அடிப்படையில் இலங்கையில் இந்துசமயம் மற்றும் இந்துக்கோயில்கள் வரலாறு, பொலன்னறுவை இராச்சியம் தொடர்பாக எழுதப்பட்ட நூல்கள், சஞ்சிகைகள், ஆய்வுக்கட்டுரைகள் போன்றவற்றின் ஊடாக தகவல்களை திரட்டி மேற்கொள்ளப்பட்டுள்ளது.*

***திறவுச்சொற்கள்:*** *சோழர்கள், இந்துக்கோயில்கள், பொலன்னறுவை இராசதானி, சிங்கள மன்னராட்சி*

**அறிமுகம்**

கி.பி.6ஆம் நூற்றாண்டு முதல் தமிழகத்திற்கும் இலங்கைக்கும் இடையே நிலவிய இறுக்கமான அரசியல், வர்த்தகத் தொடர்புகள் காரணமாக தமிழகத்தில் ஏற்பட்ட இந்துசமய மறுமலர்ச்சியின் தாக்கம் இலங்கையிலும் பிரதிபலித்தது. தமிழகத்தில் பல்லவர் காலத்தில் ஏற்பட்ட கலாசார மறுமலர்ச்சி முதிர்ச்சி கொண்ட காலமாக சோழர்காலம் காணப்படுகிறது. தமிழகத்து சைவசமய வரலாற்றில் சோழர்காலம் பொற்காலம் எனக் கருதப்படுகிறது. சோழர்கள் படையெடுத்து வெற்றி கொண்ட நாடுகளில் எல்லாம் இந்துசமயத்தை வளர்ச்சி பெறச் செய்திருந்தனர். இவ்வகையில் இலங்கையில் சோழர்கள் ஆட்சி செய்த கி.பி 993 தொடக்கம் கி.பி 1070 வரையான காலம் ஒரு மைல்கல்லாக நோக்கப்படுகிறது. ஏனெனில் இக்காலத்திலே முதன்முதல் இந்துசமயம் அரசமதம் என்ற அங்கீகாரத்தைப் பெற்று வளர்ச்சி பெற்றுக்கொண்டது.

இலங்கையில் இந்துமதம் சோழர் ஆட்சிக்காலத்தில் அரசியல் ஆதிக்கத்தால் மட்டுமன்றி வர்த்தக நடவடிக்கைகளை மேற்கொண்டவர்களாலும் வளர்த்தெடுக்கப்பட்டதனைக் காணலாம். கி.பி.10ஆம் நூற்றாண்டில் இருந்து இலங்கை- தென்னிந்திய வர்த்தகம் வணிக கணங்களின் கையில் இருந்தது. நானாதேசிகர், வீரவலஞ்சியர், நகரத்தார், வீரக்கொடியர், திசையாயிரத்து ஐந்நூற்றுர் போன்ற வணிக கணங்கள் இலங்கையின் பல பகுதிகளிலும் வர்த்தக நடவடிக்கையின் பொருட்டு குடியேறியதுடன் சுயாட்சி கொண்ட துறைமுகப்பட்டினங்களை அமைத்து இந்துசமயத்தை எழுச்சி பெறச்செய்தனர். இதனை அனுராதபுரம், பொலன்னறுவை, பதவியா, வாகல்கட போன்ற இடங்களில் கிடைத்த கல்வெட்டுக்கள் உறுதிப்படுத்துகின்றன. பொலன்னறுவையிலுள்ள கோயில்களுள் பல வணிக கணத்தவரால் அமைக்கப்பட்டிருத்தல் வேண்டும் என பேராசிரியர் பத்மநாதன் குறிப்பிட்டுள்ளார்(பத்மநாதன்.சி, 2018. ப.xvii).

மேலும் சோழராட்சிக் காலத்தில் படை மற்றும் நிர்வாக நடவடிக்கைகளுக்காக குடியேற்றப்பட்டவர்களாலும் இந்துசமயம் வளர்த்தெடுக்கப்பட்டதை அறியமுடிகிறது. வேளைக்காரர், அகம்படியர் போன்ற படைப்பிரிவினர் தமிழர்களாக இருந்ததனால் இராணுவ நடவடிக்கைகளில் மட்டுமன்றி இந்துசமய நடவடிக்கைகளிலும் பெரிதும் ஈடுபட்டனர். 1ஆம் விஜயபாகுவின் பாலமோட்டைச் சாசனத்தில் வரும் ''இத்தர்மம் அழிவுவராமல் நிலைநிறுத்துபவராக ஸ்ரீ விக்கிரம சலாமேகத் தெரிந்த வலங்கை வேளைக்காரன் என்று திருநாமமிட்டு பேருஞ் சாத்தியது'' என்னுந் தொடர் நங்கைசானி எனும் விதவைப்பெண் தன்னுடைய கணவனின் பேரில் தென்கைலாச கோயிலுக்கு வழங்கிய தானம் தடைபடாமல் நடைபெற வேண்டி நிறைவேற்றுவதற்கு வேளைக்காரப் படையிடம் பொறுப்பு ஒப்படைக்கப்பட்டதைக் குறிப்பிடுவதானது இந்துக்கோயில்களின் பாதுகாப்பில் சோழப்படை பெற்ற செல்வாக்கை எடுத்துக்காட்டுகிறது. இவ்வாறு அரசியல், இராணுவ, வணிக பிரிவுகளால் வளர்த்தெடுக்கப்பட்ட இந்துமதமானது நிர்வாக, சமய, கலை நடவடிக்கைகளுக்காக குடியமர்த்தப்பட்ட நிர்வாகிகள், பிராமணர்கள், கலைஞர்கள் போன்றோராலும் பரந்தளவில் வளர்ச்சிப் பெற்றுக்கொண்டது.

சோழர்கள் தமது சமூக, சமய, கலை நடவடிக்கைகளுக்காகவும் இலங்கையில் பல இந்துக்கோயில்களை தோற்றுவித்தனர். தமிழகத்தைப் போன்று இலங்கையிலும் இந்துமதம் கோயில்களை மையமாகக் கொண்டு வளர்ச்சி பெற்றது. சோழர்களால் மேற்கொள்ளப்பட்ட இந்நடவடிக்கை சுதேச சிங்கள மன்னர்கள் காலம் வரை தொடர்ந்தது. தென்னிந்தியாவில் பெருமளவில் தோற்றுவித்த கோயில்களைப் பின்பற்றி சோழர்கள் இலங்கையிலும் பல புதிய கோயில்களை உருவாக்கியதோடு கோயில் வழிபாட்டுமுறைகள், கோயில்சார்ந்த சமூக நடவடிக்கைகள் போன்றவற்றையும் பரப்பினர். சோழர்கள் அமைத்த பெருமளவிலான கோயில்கள் கூடுதலாக நகரங்களிலும், துறைமுகப்பட்டினங்களிலும் காணப்படுகின்றன. பதவியா, கந்தளாய், திருகோணமலை, மாதோட்டம், பொலன்னறுவை, திருமங்களாய், குருணாகல் போன்ற இடங்களில் கோயில்கள் இருந்தமைக்கான சான்றுகள் காணப்படுகின்றன. சோழர்காலக் கோயில்கள் பெரும்பாலும் சோழஅரச குடும்பத்தவர்களினுடய பெயர்களைக் கொண்ட கோயில்களாக விளங்கின. உதாரணமாக வானவன்மாதேவி ஈஸ்வரம்(பொலன்னறுவை), இராஜராஜேஸ்வரம்(மாதோட்டம்), உத்தமசோழ ஈஸ்வரம்(அத்தகாட). இலங்கையில் இதுவரை கி.பி11ஆம் நூற்றாண்டு தொடக்கம் கி.பி 13ஆம் நூற்றாண்டு வரையான காலப்பகுதிக்குரிய 30க்கு மேற்பட்ட சைவ, வைஷ்ணவ கோயில்களின் அழிபாடுகள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன.

**பொலன்னறுவைக் கோயில்கள்**

இலங்கையில் சோழர்களினுடைய ஆட்சியில் முக்கிய தலைநகராகப் பொலன்னறுவை ஜனநாதமங்களம் எனப்பெயர் சூட்டப்பட்டு 77 ஆண்டுகள் ஆளப்பட்டது. இக்காலப்பகுதியில் படைவீரர்கள், வணிகக்குழுக்கள், பிராமணர்கள், கலைஞர்கள் போன்ற தென்னிந்திய சமூகத்தைச் சேர்ந்த இந்துசமயத்தினர் பலர் இங்கு வாழ்ந்தமையால் இவர்களின் வழிபாட்டுத் தேவையின் பொருட்டு பல இந்துக்கோயில்கள் அமைக்கப்பட்டன. இதுவரை இந்துக்கோயில்கள் தோன்றிய இடங்களில் மேற்கொள்ளப்பட்ட தொல்லியல் ஆய்வுகளின்படி பொலன்னறுவை இராசதானியில் மாத்திரம் 14 இந்துக்கோயில்களும் தொல்பொருட் சின்னங்களும் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. இவற்றிலே சில சோழர் ஆட்சிக்காலத்தில் அமைக்கப்பெற்றவை. ஏனையவை அதற்கு பின்பு 1070- 1250 காலப்பகுதியில் உருவாக்கப்பட்டவை (மேலது). இங்கு நடைபெற்ற தொல்லியல் ஆய்வுகள் நடந்த முறைப்படி கோயில்கள் இலக்கமிடப்பட்டுள்ளன. இதன்படி 2ம், 5ம், 6ம், சிவதேவாலயங்கள் சோழர்காலத்தவையாக உள்ளன. பொலன்னறுவையிலுள்ள சோழர்காலக்கோயில்கள் அனைத்துமே அடையாளம் கண்டுகொள்ளப்படாமை குறிப்பிடத்தக்கது.

இக்கோயில்களுள் காலத்தால் முற்பட்டதாக 2ஆம் சிவதேவாலயம் காணப்படுகின்றது. இதுவே ஓரளவு பூரணமாகப் பேணப்பட்டிருக்கும் கோயிலாகவும், சோழர்காலக் கட்டடக்கலையில் உன்னத வளர்ச்சியை எடுத்துக்காட்டும் பொலன்னறுவையிலுள்ள இந்துக்கோயில்களுள் சிறந்த கோயிலாகவும் காணப்படுகின்றது. இங்கு கிடைக்கப்பெற்ற கல்வெட்டுச் சான்றுகளின்படி இக்கோயில் 1ஆம் இராஜராஜனின் மனைவியின் பெயரால் வானவன்மாதேவி ஈஸ்வரம் என அழைக்கப்படுகிறது. இவ்வாலயத்துடன் இணைந்து அமைந்திருந்த மூன்று சிறிய கோயில்களான கணேஸ்வர கோயில், ஸ்கந்தன் கோயில், விஸ்ணு கோயில் ஆகியனவும் அடையாளம் காணப்பட்டுள்ளன. மேலும் 2ஆம் சிவதேவாலயத்தில் 1ஆம் இராஜேந்திர சோழனுடைய இரண்டு சாசனங்களும், அதிராஜேந்திர சோழனுடைய இரண்டு சாசனங்களும் காணப்படுகின்றன(பத்மநாதன்,சி. 2018. ப.148). இவ்வாலயம் நான்கு திசைகளிலும் இருந்து உள்ளே செல்லக்கூடிய அமைப்புக்களுடன் கட்டப்பட்டுள்ளது. காலமாற்றத்தினால் கோயிலின் அடித்தளம் நிலமட்டத்திற்கு கீழே செல்ல அதைப்பாதுகாக்க சுற்றுச்சுவர்கள் பிற்காலத்தில் அமைக்கப்பட்டுள்ளன. இக்கோயிலின் பிரகாரம் வடக்குத் தெற்காக 96அடியிலும், கிழக்கு மேற்காக 84அடியிலும் அமைக்கப்பட்டுள்ளது. இதன் வடகீழ்திசையில் நான்கு தெருக்கள் கோயிலைச் சுற்றியும் நகரத்தைச் சுற்றியும் அமைந்துள்ள போதும் விமானம், கர்ப்பக்கிரகம், அந்தாரளம், அர்த்த மண்டபம், மகாமண்டபம் முதலியனவும் அமைக்கப்பட்டுள்ளன. பொலன்னறுவையில் இன்றுவரை கல்லினால் கட்டப்பட்டு பூரணமாகக் காணப்படும் ஒரு கோயிலாக வானவன்மாதேவி ஈஸ்வரம் காணப்படுகிறது. சுண்ணக்கல்லும் கருங்கல்லும் கலந்து கட்டப்பட்ட இக்கோயில் 10ஆம், 12ஆம் நூற்றாண்டில் தமிழகத்தில் எழுந்த கோயில்களை ஒத்துக் காணப்படுவதாக வரலாற்றாசிரியர்கள் பலர் ஒப்புக்கொண்டுள்ளனர்.

பொலன்னறுவையில் சோழர்காலக் கோயில்கள் என அயையாளம் இடப்பட்ட 5ஆம் சிவாலயம் பள்ளிப்படைக் கோயிலாகக் காணப்படுகிறது. பள்ளிப்படைக் கோயில் என்பது மன்னர்கள் அல்லது சமயப்பெரியார்கள் இறந்த பின்னர் அவர்களை அடக்கம் செய்து அவ்விடத்தில் அமைக்கப்பட்ட கோயில்களைக் குறிப்பதாகும். கி.பி 1908ஆம் ஆண்டில் இக்கோயில் கண்டுபிடிக்கப்பட்டது. இக்கோயிலின் தூண்களில் பொறிக்கப்பட்ட பல பெயர்களைக் கொண்டு அது பொலன்னறுவையில் வாழ்ந்த சோழர்காலத்தைச் சேர்ந்த தமிழ்க்குழுவினரால் அமைக்கப்பட்டிருக்கலாம் எனக் கருதப்படுகிறது. ஸ்ரீ மோகனுருதயன், திரிபுவனதேவன் தில்லைதியக்க சிந்தாமணி மூவேந்த வேலன், பஞ்சன் திவானன், நல்லூகுதயன், மங்கலப்பட்டி வேலன் சோழன் பல்லவராயன் முதலிய பெயர்களைக் கொண்டு பேராசிரியர் இந்திரபாலா இக்கோயிலினால் பொலன்னறுவையில் இருந்த பல தமிழர்கள் ஒன்று கூடிக்கட்டியிருக்க வேண்டுமெனத் தோன்றுகின்றது எனக் குறிப்பிட்டுள்ளார்(இந்திரபாலா,கா. 1970. ப.30). இக்கோயில் பிரகாரத்தைச் சுற்றி 5கோயில்கள் காணப்படுகின்றன. இவற்றுள் இரண்டு கோயில்களில் கண்டெடுக்கப்பட்ட சிலைகளைக் கொண்டு இக்கோயிலின் தென்மேற்கு மூலையில் இருப்பது விநாயகர் கோயிலெனவும், கிழக்கில் இருப்பது நடராஜமூர்த்தி கோயிலெனவும் கூறப்படுகிறது. சிறந்த வேலைப்பாடுகளைக் கொண்ட 5ஆம் சிவதேவாலயத்தில் பெருமளவிலான வெண்கலச்சிலைகள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன.

பொலன்னறுவை சோழர்காலக் கோயில்களுள் 6ஆம் சிவாலயமும் முக்கியமானது. இக்கோயில் 5ஆம் சிவாலயத்தை ஒத்ததாகக் காணப்படுகிறது. அதாவது 5ஆம் சிவாலயம் போன்று பிரதான கர்ப்பக்கிரகம், அந்தராளம், அர்த்தமண்டபம், மகாமண்டபம் போன்றவற்றைக் கொண்டுள்ளது. இக்கோயிலின் அருகே பல வெண்கலச்சிற்பங்கள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. 6ஆம் சிவாலயத்தின் அழிபாடுகளுக்கிடையில் சோழர்காலக் கலைப்பாணியிலமைந்த நடராஜரின் வெண்கலப் படிமம் ஒன்று அக்காலத்திற்குரிய வரிவடிவங்களிலான "ஸ்ரீ ஆண்பிள்ளை பெருமாள்" என்ற பெயர் பொறிக்கப்பட்ட மணியொன்று கிடைத்தமை குறிப்பிடத்தக்கது(Archaeological Survey of Ceylon Annual Report. 1981. p.12, 1906.p.27). இத்தகைய சான்றுகளைக் கொண்டு நோக்கும் போது பொலன்னறுவையில் சோழர் ஆட்சியில் பல இந்துக்கோயில்கள் அமைக்கப்பட்டு இந்துப்பண்பாடு வளர்த்தெடுக்கப்பட்டதை அறியமுடிகிறது.

மேலும் பல இந்துக்கோயில்கள் வடமத்திய மாகாணத்தில் கட்டப்பட்டிருந்தமைக்கான அழிபாடுகள் கிடைக்காதவிடத்தும் இங்கு கிடைக்கப்பெற்ற கல்வெட்டுச்சான்றுகளைக் கொண்டு அத்தகட, மெதரிகரிய போன்ற இடங்களில் சோழர்காலக்கோயில்கள் அமைக்கப்பட்டுள்ளதை அறியமுடிகிறது. அத்தகடவில் கிடைத்த கல்வெட்டில் 1ஆம் இராஜராஜனுக்கு முன்பு அரசனாக இருந்த உத்தமசோழன் பெயரைக் கொண்ட உத்தமசோழ ஈஸ்வரம் எனும் கோயில் பற்றி அறியமுடிகிறது. இக்கோயில் 11ஆம் நூற்றாண்டில் இலங்கையில் இருந்த தமிழ்பிரதானிகளால் அமைக்கப்பட்டுள்ளது. கல்வெட்டில் இக்கோயிலுக்கு அளிக்கப்பட்ட தானங்கள் பற்றிய செய்திகள் காணப்படுகின்றன. அரங்கன் இராமேசன் என்பான் கோயிலுக்கு ஒருவேலி நிலமும் நந்தா விளக்கொன்றினை எரிப்பதற்கு 50தென்னைகளையும் தானமாகக் கொடுத்தான் (பத்மநாதன்,சி. 2018. ப.147) என்ற செய்தி குறிப்பிடப்பட்டுள்ளது.

மெதிரிகிரியாவில் கிடைத்த கல்வெட்டு 2ஆம் இராஜேந்திரன் காலத்தைச் சேர்ந்ததாகும். சோழர்கள் மண்டலகிரி நகரத்தில் கவனம் செலுத்தியிருந்தனர் என்றும் அந்த நகருக்கு நித்தவிநோதபுரம் என்று ஒரு புதிய பெயரை இட்டிருந்தனர் என்பதும் இக்கல்வெட்டினால் அறியக்கிடக்கிறது. நித்தவினோதன் என்பது 1ஆம் இராஜராஜசோழனுடைய விருதுப் பெயர்களுள் ஒன்றாகும். இக்கல்வெட்டினூடாக பண்டிதசோழ ஈஸ்வரம் என்னும் சிவாலயமொன்று இங்கிருந்தமை புலனாகிறது. சோழர்களுடைய படைப்பிரிவுகளுள் இளைய மும்முடிச்சோழ அணுக்கர் இராணுவப் பிரிவைச் சேர்ந்த வளவன் பித்தன் சரவணன் என்பவன் தன்மகன் நாராயணன் மேலான தர்மமாக பண்டித சோழ ஈஸ்வரத்திற்கு நந்தா விளக்கொன்றினையும் இரண்டு பசுக்களையும் தானமாகக் கொடுத்ததை மெதிரிகிரிய கல்வெட்டு விபரித்துள்ளது(Third Archaeological Excavation Report. 1982. P.128).

**வடக்கு, கிழக்கு இலங்கைக் கோயில்கள்**

சோழர்களினுடைய தலைநகராக பொலன்னறுவை காணப்பட்ட போதும் நிர்வாக, வர்த்தக, பண்பாட்டு நடவடிக்கைகள் பெருமளவுக்கு வடக்கு, கிழக்கிலுள்ள தமிழர் பிராந்தியங்களை மையமாகக் கொண்டு நடைபெற்றதை இங்கு கிடைக்கப் பெற்ற தொல்லியற் சான்றுகள் உறுதிப்படுத்துகின்றன. சோழர்களின் முக்கியமான இடங்களிலொன்றாக பதவியா காணப்பட்டது. ஸ்ரீபதி கிராமம் என அழைக்கப்பட்ட இங்கு 4இந்துக்கோயில்கள் அமைக்கப்பட்டிருந்தன. ஆனால் தொல்லியல் அகழ்வாய்வுகளின் போது கோயில்களின் அடித்தளங்கள் மட்டுமே கண்டுபிடிக்கப்பட்டன. இக்கோயில்களுள் 1ஆம் சிவாலயம் என அழைக்கப்படும் ரவிகுலமாணிக்க ஈஸ்வரம் 1ஆம் இராஜராஜனின் பெயரால் அமைக்கப்பட்டுள்ளது. இக்கோயிலின் அழிபாடுகளுக்கிடையில் 5கல்வெட்டுக்கள் கிடைத்துள்ளன. இங்கு கிடைத்துள்ள இராஜராஜசோழனுடைய கல்வெட்டில் இராஜராஜன் காலத்தில் பதவியாவில் இருந்த நானாதேசிகர் வணிக குழுவினர் ரவிகுல மாணிக்க ஈஸ்வரம் ஆலயத்திற்கு வெண்கல எறிமணியொன்றினையும், வெண்கல மணியொன்றினையும் வழங்கிய செய்தியை அறியமுடிகிறது.

பதவியாவில் இன்னுமொரு கோயில் நீர்ப்பாசன வாய்க்காலுக்கு அருகாமையில் அமைந்திருந்தது. அதன் அழிபாடுகளுக்கிடையே தாமரைச் சிற்பம் ஒன்று செதுக்கப்பட்ட தூண், நந்தி உருவத்தின் உடைந்த பாகங்கள் ஆகியன காணப்பட்டமையை இங்கு கிடைத்த கல்வெட்டுக்கள் எடுத்தியம்புகின்றன(கிருஸ்ணராஜா,செ. 2008. ப.149).

கிழக்கிலங்கையில் கந்தளாய் பிரதேசத்திலும் சோழர்கள் இந்துக்கோயில்களை அமைப்பதிலும் பராமரிப்பதிலும் பெரிதும் ஆர்வம் காட்டியிருந்தனர். இப்பிரதேசத்தில் பிராமணர்கள் குடியிருப்பாக கந்தளாய் பிரம்மதேயம்- இராஜராஜசதுர்வேதி மங்கலம் என சோழர்களால் உருவாக்கப்பட்டது. பிராமணர்கள் தமது சமயக்கடமைகளை கோயிலை அண்டியே நிறைவேற்றுவதால் இப்பிரம்மதேயத்தின் எல்லைக்குள் ஈஸ்வரம் ஒன்றும் அம்மன் ஆலயமொன்றும் அமைந்திருந்தன எனக் கூறப்படுகிறது. இவ்விடத்தில் கண்டுபிடிக்கப்பட்ட ஆவுடையார், மகாவிஷ்ணு சிற்பங்கள் சைவ, வைஷ்ணவ வழிபாடு நடைபெற்றதை உறுதிப்படுத்துகிறது. மேலும் இங்கு கிடைக்கப்பெற்ற சோழ இலங்கேஸ்வரனுடைய சாசனத்தில் வரும் ‘‘நம்மூர் தண்டுகின்ற முத்தங்கைக் கோயில்மானி’’ எனுந் தொடரானது குறிக்கப்பெற்ற சதுர்வேதி மங்கலத்திலே அம்மன் கோயிலொன்று இருந்தமையினை உணர்த்துகின்றது(பத்மநாதன்,சி. 2018. ப.159). அதாவது ஊரிலுள்ள குடியார்களிடமிருந்து இறைகடமைகளைச் சேகரிப்பதற்கென இராஜராஜசதுர்வேதி மங்கலத்துச் சபையார் தம்மூரிலுள்ள அம்மன் கோயிலைச் சேர்ந்த அந்தணனொருவனை நியமித்தனர்(மேலது). என்பதனூடாக உறுதிப்படுத்தப்படுகின்றது.

கிழக்கிலங்கையில் அமைக்கப்பட்ட முக்கியமான சோழர்காலக் கோயில்களுள் ஒன்றான கிளிவெட்டி திருமங்களாய் சிவன் கோயில் பேராசிரியர் புஸ்பரட்ணம் அவர்களால் முதன்முதலில் கண்டுபிடிக்கப்பட்டது. அழிவடைந்த நிலையில் காணப்படும் இப்பகுதிகளில் இதுவரை 5 தமிழ்க்கல்வெட்டுக்கள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன(புஸ்பரட்ணம்,ப. 2017. ப.113). இக்கல்வெட்டுக்களுள் 3 கல்வெட்டுக்கள் கி.பி 10-11ஆம் நூற்றாண்டையும் ஏனைய 2கல்வெட்டுக்களும் கி.பி 15-16ஆம் நூற்றாண்டையும் சேர்ந்தவையாகும். இவற்றுள் 11ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த கல்வெட்டுக்கள் கோயிலுக்கு தானமாக வழங்கப்பட்ட பொன், காசு, பசுக்களின் எண்ணிக்கை போன்றவற்றை குறிப்பிடுகின்றன. கருங்கற்களையும் செங்கட்டிகளையும் கொண்டு கட்டப்பட்ட இவ்வாலயத்தின் அமைப்பு, கலைமரபு, தூண்களின் வடிவமைப்பு என்பவை பொலன்னறுவை 2ஆம் சிவாலயத்தை நினைவுபடுத்துவதாகவும் ஆயினும் தோற்றத்தில் இக்கோயில் மிகப்பெரியதாக இருந்திருக்குமென்பதை கோயிலின் அழிபாடுகள் உறுதி செய்கின்றன என பேராசிரியர் புஸ்பரட்ணம் குறிப்பிட்டுள்ளார்(மே.கூ.நூல். ப.112).

வடஇலங்கையைப் பொறுத்த வரை சோழர்களினுடைய நிர்வாக, இராணுவ, படைத்தளங்களாக மாதோட்டம், பூநகரி, ஊர்காவற்துறை போன்றன காணப்பட்டுள்ளன. இவற்றுள் முக்கிய துறைமுகப்பட்டினமாக இருந்த மாதோட்டத்திலும் இந்துக்கோயில்கள் அமைக்கப்பட்டன. குறிப்பாக இராஜராஜேஸ்வரம், திருவிராமேஸ்வரம் போன்ற கோயில்கள் சோழர்காலக் கோயில்களாக அடையாளம் காணப்பட்டுள்ளன. 1ஆம் இராஜராஜசோழனின் பிரதிநிதியாக இருந்த தாழிக்குமரனால் வெளியிடப்பட்ட 1இராஜராஜன் காலக் கல்வெட்டினூடாக இராஜராஜேஸ்வரம் கோயில் பற்றிய செய்திகளை அறியமுடிகிறது. இக்கல்வெட்டு மாதோட்டம் இராஜராஜபுரம் என அழைக்கப்பட்டதையும், இங்கு 1ஆம் இராஜராஜன் பெயரில் இராஜராஜேஸ்வரம் கோயிலுக்கு அளிக்கப்பட்டதானங்கள் பற்றியும் அத்தலத்தில் நடைபெற்ற விழாக்கள் மற்றும் மாதோட்ட துறைமுகத்தின அமைப்பு பற்றியும் குறிப்பிடுகிறது(கிருஸ்ணராஜா,செ. 2008. ப.147). இச்செய்தியின் ஊடாக அரசநிதியுடன் நடாத்தப்பட்ட ஒரே கோயில் இராஜராஜேஸ்வரம் எனத் தெரிகிறது(Pathmanathan,S.1979. pp 59- 70).

மேலும் மாதோட்டத்தில் காணப்பட்ட மற்றுமொரு ஆலயமாக திருவிராமேஸ்வரம் காணப்படுகிறது. இக்கோயிலும் கூட பூரணமாக அழிந்துள்ளது. இருப்பினும் இங்கு கிடைத்த இராஜேந்திர சோழன் காலத்தைச் சேர்ந்த கல்வெட்டு திருவிராமீஸ்வரம் என்னும் கோயில் சோழராட்சிக் காலத்தில் மாதோட்டத்தில் சிறந்து விளங்கியிருந்ததை எடுத்துக்காட்டுகிறது. இக்கல்வெட்டிலே கோயிலைக் கட்டுவித்தவரைப் பற்றியோ அல்லது இக்கோயிலைப் பற்றியோ வேறு தகவல்களோ கொடுக்கப்படாத போதும் இராஜேந்திர சோழனின்

பெருந்தனத்துப் பணி மக்களுள் ஒருவர் கோயிலுக்கு இடுவித்த தானங்கள் இக்கல்வெட்டிலே குறிப்பிடப்பட்டுள்ளன(ஐடினை.64-65). இருப்பினும் இவ்வாலயங்கள் மாதோட்டத்தில் எந்த இடங்களில் அமைந்தன என்பது இதுவரை அறிந்து கொள்ள முடியவில்லை. இங்கு விரிவான ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டால் கல்வெட்டுக்களிலே கூறப்பட்ட இரு கோயில்களை விட மேலும் பல கோயில்களும் கல்வெட்டுக்களும் கண்டுபிடிக்க வாய்ப்புக்கள் உள்ளன(புஸ்பரட்ணம்,ப. 2017. ப.115).

**சிங்கள மன்னராட்சியும், இந்துக்கோயில்களும் பண்பாடும்**

இலங்கையில் 77ஆண்டுகள் இடம்பெற்ற சோழராட்சியின் போது இந்துமதம் அரசமதமென்ற அந்தஸ்தைப் பெற்று இந்துக்கோயில்களும் பண்பாடும் இலங்கையில் ஆழமாக வேரூன்றியது. 1ஆம் விஜயபாகு மன்னனால் இலங்கையிலிருந்து சோழராட்சி விடுவிக்கப்பட்டு சுதேச சிங்கள் மன்னர்களின் ஆட்சி மீண்டும் நிலைநிறுத்தப்பட்ட போதும் சோழர்களினால் உருவாக்கப்பட்ட இந்துக்கோயில்கள், பிராமணக்குடியிருப்புக்கள், தமிழ்ப்படைவீரர்கள், நிர்வாகிகளின் செல்வாக்கு திராவிடக் கட்டக்கலை மரபுகள் போன்றன முன்பு போலவே தொடர்ந்தும் நீடித்தன. இதற்கு சுதேச சிங்கள மன்னர்கள் தென்னிந்திய (சோழ, பாண்டிய) கலிங்க வம்சங்களுடன் கொண்ட திருமண உறவினால் இந்துசமயத்தையும் அதன் நிறுவனங்களையும் ஆதரித்ததோடு அரசசபைகளிலும் இந்துசமயமும் இந்துசமயக்கிரியைகள், சடங்குகள், விழாக்கள் போன்றனவும் முன்னுரிமை பெற்றன. அதுமட்டுமன்றி சோழர்காலத்தில் குடியமர்த்தப்பட்ட வணிக கணங்கள், படைவீரர்கள், பிராமணர்கள், கலைஞர்கள் சோழராட்சியைத் தொடர்ந்தும் இலங்கையில் தங்கியதால் இவர்களுடைய தேவைகளின் பொருட்டும் இந்துசமயம் ஆதரிக்கப்பட்டது.

மேலும் தமிழர்கள் மீதும் அவர்களுடைய கோயில்கள் மீதும் தாக்குதல் மேற்கொண்டால் மறுபடியும் தென்னிந்தியப் படையெடுப்புக்கும் இலங்கையில் தங்கியிருக்கும் படைவீரர்களின் கலகங்களுக்கும் முகங்கொடுக்க வேண்டி வரலாம் போன்ற காரணங்களினால் இந்துசமயத்தையும் பௌத்த மதத்தைப் போன்று ஆதரித்ததோடு இந்து ஆலயங்களைப் புதிதாக அமைத்தும், புனரமைத்தும் தானங்கள் வழங்கி, பிராமணர்களையும் அரசசபைகளில் முதன்மைப்படுத்தி ஆதரித்ததோடு இந்து சமயக்கிரியைகள், சடங்குகள் போன்றவற்றிலும் பங்குகொண்டனர்.

1ஆம் விஜயபாகு சோழரை வெற்றி கொண்டு இலங்கைக்கு அரசியல் சுதந்திரம் பெற்றுக் கொடுத்த போதும் பண்பாட்டுத்துறையில் பூரண சுதந்திரத்தைப் பெற்றுக் கொடுக்க முடியவில்லை. இதனையே பேராசிரியர் பரணவிதான பின்வருமாறு குறிப்பிடுகிறார். ''1ஆம் விஜயபாகு அரசகட்டிலேறின பின்னர் இந்துமத வழிபாட்டு முறைகளைப் புறக்கணிக்க முடியவில்லை. இவன் சோழர்கால சமயஸ்தானங்கள் தொடர்ந்து இயங்க அனுமதித்ததோடு தனது காலத்தில் அமைக்கப்பட்ட சைவக்கோயில்களுக்கும் தனது ஆதரவை வழங்கினான்'' என்பதாகும். இதற்குச் சான்றாக சோழரால் கந்தளாயில் அமைக்கப்பட்ட பிராமணக் குடியிருப்பான இராஜராஜசதுர்வேதிமங்கலம் மற்றும் தென்கைலாசம் கோயில் போன்றன இம்மன்னனுடைய ஆதவைப் பெற்று விஜயராஜசதுர்வேதி மங்கலம், விஜயராஜேஸ்வரம் எனப்பெயர் மாற்றப்பட்டமை தக்க சான்றாகும். இவனுடைய 42ஆம் ஆண்டைச் சேர்ந்த பாளமோட்டைச் சாசனத்தில் நங்கைசானி எனும் பிராமண விதவைப்பெண் இறந்த தனது கணவனான காராம்பைச் செட்டுயஜ்ஜீய கிரமவித்தன் ஞாபகார்த்தமாக விஜயராஜேஸ்வர கோயிலுக்கு அளித்த தானத்தையும் தானம் கொடுத்தோரின் எண்ணம் சரிவர நிறைவேறும் வண்ணம் பார்த்துக்கொள்ளும் பொறுப்பு வேளைக்காரப்பிரிவினரிடம் அளிக்கப்பட்டுள்ளதைக் குறிப்பிடுகிறது. தானமாக 6களஞ்சு பொன்முடி, சந்திவிளக்கொன்றினை எரிப்பதற்கென்று ஒருகாசு, பொலிமுதல் கொண்டு நந்தவனம் வைப்பதற்கென்று எட்டுக்காசு இவற்றுக்கு ஏற்படும் அழிவுகளை ஈடுசெய்வதற்கென்று ஒரு காசு தேவரடியார் எழுவரைத் தலை இலட்சனையிட்டு பராமரிப்பதற்கென்று இருபத்துமூன்று காசு என்பவை வழங்கப்பட்டுள்ளது. இச்செய்திகளின் ஊடாக பாளி இலக்கியங்களில் 1ஆம் விஜயபாகு பௌத்தமதத்தின் பாதுகாவலனாக கூறப்பட்டாலும் சோழர்களினால் உருவாக்கப்பட்ட இந்துக்கோயிலை தன்னுடைய பெயருக்கு மாற்றஞ் செய்து பேணிப்பாதுகாத்தமை புலனாகிறது. சோழராட்சியைத் தொடர்ந்து விஜயபாகுவின் அரசியல் மற்றும் பௌத்த சமயத்தைப் பாதுகாக்கும் முக்கிய பொறுப்பினைப் பெற்றுக்கொண்ட வேளைக்காரப்படைப் பிரிவினரிடமே

நங்கைசானியும் விஜயராஜேஸ்வர கோயில் பாதுகாப்பினை வழங்கியுள்ளமை மற்றும் தென்னிந்தியாவைப் போன்று தேவரடியார்கள் இங்கு கோயில்கடமைகளுக்காக நியமிக்கப்பட்டமை போன்ற விடயங்கள் 1ஆம் விஜயபாகு மன்னர் காலத்தில் இந்துக்கோயில்களும் பண்பாட்டு நடவடிக்கைகளும் வீழ்ச்சியடையாது தொடர்ந்தும் வளர்ச்சியடைந்து பேணப்பட்டதையே காட்டுகிறது. 2ஆம் கஜபாகுவினுடைய காலத்திலும் விஜயராஜேஸ்வரம் பிரசித்தி பெற்று விளங்கியமையானது 1ஆம் விஜயபாகுவைத் தொடர்ந்து வந்த சுதேச மன்னர்கள் யாவரும் இக்கோயிலை ஆதரித்து நின்றதை புலப்படுத்துகிறது. மேலும் பௌத்த சமயத்தின் தீவிரமான ஆதரவாளனான நிஸங்கமல்லன் கந்தளாயில் சதுர்வேதி பிரம்மபுரத்திலே இந்துக்கோயிலின் விழாவொன்றிலே பங்குபற்றி தானசத்திரம் எனும் அறச்சாலையை நிறுவியதோடு அங்கு நடைபெற்ற தானங்களை பார்வையிட்டதோடு விழாவொன்றிலே நடைபெற்ற ஆடல்பாடல்களை கண்டு இரசித்தான் எனக் கூறப்படுகிறது. இதனூடாக விஜயராஜேஸ்வரம் கோயிலைத்தான் நிஸங்கமல்லனும் தரிசித்தான் எனக் கருதமுடிகிறது. மேலும் இம்மன்னனும் கூட இந்துசமயத்தையும் இந்துக்கோயில்களையும் பண்பாட்டையும் விலக்கிவைக்க முடியாமல் ஆதரித்தமையானது இக்காலக்கோயில்களும் இந்துசமயமும் பெற்றிருந்த முக்கியத்துவத்தை எடுத்துக்காட்டுகின்றன.

1ஆம் விஜயபாகுவைத் தொடர்ந்து முடிசூடிய ஜெயபாகு(கி.பி 1110- 1112) மிகக்குறுகிய காலமே ஆட்சி புரிந்ததனால் இவனுக்குப்பின் வந்த விக்கிரமபாகு, 2ஆம் கஜபாகு ஆகியோர் சைவமதச்சார்புடையோராக ஆட்சி புரிந்துள்ளனர். குறிப்பாக விக்கிரமபாகுவிற்கு சிங்கள பௌத்த மன்னர்களுக்கு நடைபெறும் முடிசூட்டு விழா நடைபெறாமை மற்றும் சூளவம்சத்திலே விக்கிமபாகு இந்து மன்னனாகவே ஆட்சி செய்தான் என்ற குறிப்பு இம்மன்னுடைய 21ஆண்டுகால (கி.பி.1111- 1132) ஆட்சியில் இந்துமதம் அடைந்த உச்சவளர்ச்சியை எடுத்துக்காட்டுகிறது. மேலும் விக்கிரமபாகு இந்துமதத்திற்கு அளித்த ஆதரவை குருணாகல் மாவட்டத்திலுள்ள மாகல என்ற இடத்தில் கிடைத்த கல்வெட்டுக்களும் உறுதிப்படுத்துகின்றன. மாகலில் சோழருடைய படைத்தளம் அமைந்திருந்தபடியால் விக்கிரமசலாமேக ஈஸ்வரம் சோழராட்சிக் காலத்தில் உருவாக்கப் பெற்றதெனக் கருதலாம்(பத்மநாதன்,சி. 2018. ப.313). கந்தளாயிலுள்ள கோயிலுக்கும் பிரம்மதேயத்துக்கும் 1ஆம் விஜயபாகு தன்னுடைய பெயரை இட்டது போன்று விக்கிரமபாகுவும் மாகல நகருக்கு விக்கிரமசலாமேகபுரம் எனவும் இங்குள்ள சிவாலயத்திற்கு விக்கிரமசலாமேக ஈஸ்வரம் எனப்பெயர் மாற்றினான் என்பதை இங்கு கிடைக்கப்பெற்ற கல்வெட்டின் ஊடாக அறியமுடிகிறது. மேலும் காகம்பிலியாவக் கல்வெட்டில் விக்கிரமபாகு தன்னை "பார்வதிபதி தந்தாஸிர் வீரவிருஷ நீதிபராயன்ய ராஜநாராயண (பார்வதியின் பதியாகிய நாதனின் கிருபை பெற்றவனும் வீர நந்தியுமாகிய அவனுக்கு ஒழுக்கமே இறுதிக் குறிக்கோள்) என தன்னை வர்ணித்துள்ளான். இதேவேளை சூளவம்சமும் "அவசியமான யாகத்தையும் ஏனைய இந்துக் கிரியைகளையும் வேதங்களையும் வேதங்களிலும், வேதாகமங்களிலும் கைதேர்ந்த தனது புரோகிதர்களாலும் ஏனைய பிராமணர்களாலும் நிறைவேற்றினான்" எனக் குறிப்பிட்டுள்ளது. இதனால் சூளவம்சம் விக்கிரமபாகு பௌத்தமத நிறுவனங்களுக்கெதிராக நடவடிக்கைகளை மேற்கொண்டதாகவே வர்ணிக்கிறது. அதாவது இவன் தன்னிச்சையாக பௌத்த கோயில்களின் நிலங்களைத் தனது சேவையில் இருந்தோருக்கு அளித்ததோடு நகரத்திலுள்ள விகாரைகளையும், வெளிநாட்டு படைவீரர்களின் வாசஸ்தலங்களாக மாற்றியதோடு தந்ததாதுக் கோயில்கள் போன்றவற்றுக்கு கொடுக்கப்பட்ட பொருட்களையும் தன்னிச்சையாக விரயஞ் செய்தான் எனக் கூறுகிறது. இதனூடாக விக்கிரமபாகு பௌத்தமதத்திற்கு ஆதரவு எதுவும் வழங்காமல் இந்துசமயத்தை பின்பற்றி ஆட்சி புரிந்துள்ளான் என்பது புலனாகிறது(அனித்தா,ச. 2018. ப.24-25).

விக்கிரமபாகுவுக்குப் பின்னர் அவனுடைய மகனான 2ஆம் கஜபாகு ஒரு இந்து ஆட்சியாளனாக 22 வருடங்கள் (1132 – 1153) ஆட்சி புரிந்துள்ளான். கஜபாகுவும் தந்தையைப் போல் ஓர் சைவனாகவே ஆட்சி செய்ததால் பாளி இலக்கியங்களில் இவனும் முக்கியப்படுத்தப்படவில்லை. சூளவம்சத்தில் கஜபாகுவின் முடிசூட்டுவிழா பற்றிய எவ்வித தகவலும் குறிப்பிடப்படவில்லை. இதேவேளை ஈழத்தையாண்ட மன்னர்களின் வரிசையில் கஜபாகுவின் பெயர் இராஜாவலியா, பூஜாவலியா போன்ற நூல்களில் இடம்பெற்றிருக்காமையும் குறிப்பிடத்தக்கது. சூளவம்சம் கஜபாகு மன்னனை "மதநம்பிக்கையற்றவர்களை வெளிநாட்டில் இருந்து

அழைத்து வந்து நாட்டை நிறைத்தான்'' எனக் குறிப்பிட்டுள்ளது. கஜபாகுவின் இந்து மதப்பணிகள் பற்றிய தகவல்களை கோணேசர் கல்வெட்டு, திருக்கோணசல புராணம், மாங்கனாய் கல்வெட்டு போன்றனவும் தருகின்றன. இம்மன்னன் பெருமாள், கஜபாகுதேவர், சலாமேகன் போன்ற இந்துமதம் சார்பான விருதுப்பெயர்களை சூடிக்கொண்டிருந்தார். திருக்கோணேஸ்வரத்தின் அர்ச்சகராக இருந்த பாசுபதபிராமணர் இறந்ததைத் தொடர்ந்து கோணேசர் ஆலய நிர்வாகத்திலும், பூசை நடைமுறையிலும் பல தடைகள் ஏற்பட்டு இருந்தன. கோணேசர் ஆலயத்திற்கு வருகை தந்த 2ம் கஜபாகு மன்னன் தடைகளை நிவர்த்தி செய்ய 1522 களஞ்சு பொன் மற்றும் 249 களஞ்சு பொன்னகை கொடுத்ததாக கோணேசர் கல்வெட்டு கூறுகிறது. இவ்வாறு கஜபாகு இந்து மதத்திற்கு அதிக முக்கியத்துவம் கொடுத்தமை தான் பௌத்த மதத்தை முதன்மைப்படுத்தும் சூளவம்சத்தில் இவனுடைய வரலாறு முதன்மைப்படுத்தி கூறப்படாததற்கு முக்கிய காரணமென வரலாற்று ஆய்வாளர்கள் குறிப்பிட்டுள்ளனர்.

1ஆம் பராக்கிரமபாகு பௌத்த மதத்திற்கு பங்களிப்பு செய்த அதேவேளை இந்துசமயத்திற்கும் ஆதரவு அளித்துள்ளான். சூளவம்சம் இம்மன்னன் 13கோயில்களை புதிதாக நிறுவியதோடு 79கோயில்களை புனரமைப்புச் செய்ததாக குறிப்பிட்டுள்ளது. மேலும் இம்மன்னன் பிராமணர்களுக்கு தானம் கொடுத்ததோடு, பிராமணர்கள் பிராயசித்த சடங்குகளை மேற்கொள்ளவும் மந்திரங்களை ஓதவும் கேமமண்டலத்தையும் அழகிய தரணிகாராவையும் நிர்மானித்து பிராமணர்களை ஆதரித்தான் என்ற செய்தியையும் குறிப்பிடுகிறது. இச்செய்திகளினூடாக 1ஆம் பராக்கிரமபாகு இந்துக்கோயில் வளர்ச்சிக்கு எந்தளவுக்கு பணியாற்றினான் என்பது புலனாகிறது(அனித்தா,ச. 2018. ப.26).

அடுத்து இதுவரை மேற்கொள்ளப்பட்ட தொல்லியல் ஆய்வுகளின் ஊடாக பொலன்னறுவையில் சோழர்காலத்தைச் சேர்ந்தவையென கண்டுபிடிக்கப்பட்ட 2ஆம், 5ஆம், 6ஆம் சிவாலயங்களுள் 2ஆம் சிவாலயம் முழுமையாக இன்றுவரை காணப்படுகின்றமை சுதேச சிங்கள மன்னர்களைத் தொடர்ந்தும் இவ்வாலயம் ஆதரிக்கப்பட்டதையே எடுத்துக்காட்டுகிறது. இதேபோன்று கிளிவெட்டி திருமங்களாய் சிவன்கோயிலில் கண்டெடுக்கப்பட்ட 5கல்வெட்டுக்களுள் 2கல்வெட்டுக்கள் 15, 16ஆம் நூற்றாண்டைச் சேர்ந்தவையாக உள்ளன. இதனூடாக சோழராட்சியைத் தொடர்ந்தும் சுதேச மன்னராட்சியிலும் இக்கோயில் சிறப்புப்பெற்றதோடு ஐரோப்பியர் ஆட்சியின் போதும் கல்வெட்டுக்கள் பொறிக்கப்படுமளவிற்கு இக்கோயில் வரலாற்றுச் சிறப்புடையதாக விளங்கியிருந்ததை அறியமுடிகிறது.

இவ்வகையில் இலங்கையில் இந்துசமயத்திற்கும் பண்பாட்டிற்கும் புத்துயிர்ப்பு செய்த சோழர்களினால் கட்டப்பட்ட பல இந்துக்கோயில்களுக்கு பிற்பட்ட சுதேச சிங்கள மன்னர்கள் ஆதரவு வழங்கியிருந்தாலும் கி.பி 16ஆம் நூற்றாண்டில் இடம்பெற்ற ஐரோப்பியரின் வருகையைத் தொடர்ந்து அவர்களின் கிறிஸ்தவ மதம்பரப்பல், கலையழிவுக்கொள்கை போன்றவற்றால் பல இந்துக்கோயில்கள் அழிக்கப்பட்டு மண்ணுள் புதையுண்டதுடன், சில கோயில்களின் கற்கள் கிறிஸ்தவ தேவாலயங்களை அமைப்பதற்காகவும் பயன்படுத்தப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

**முடிவுரை**

இலங்கையின் இடைக்கால வரலாற்றிலே பொலன்னறுவை இராசதானி காலத்திலே இந்துசமயம் அதிஉன்னத வளர்ச்சி பெற்றிருந்ததை தொல்லியல் கண்டுபிடிப்புக்கள் நிரூபிக்கின்றன. இதற்கு பொலன்னறுவையைத் தலைநகராகக் கொண்டு ஆட்சி செய்த சோழர்கள் இந்து சமயத்தவர்களாக இருந்ததோடு இந்து சமயத்தை அரசமதமாகப் பிரகடணப்படுத்தி நடைமுறைப்படுத்தியமை, மற்றும் சோழராட்சியின் போது நிர்வாக, இராணுவ, வாணிப, கலை நடவடிக்கைகளுக்காக தென்னிந்தியாவிலிருந்து இலங்கையில் குடியமர்த்தப்பட்டவர்களுள் கணிசமானோர் சோழராட்சி நிறைவடைந்த பின்னரும் தங்கியிருந்து இந்துசமயத்தை வளர்ச்சி பெறச்செய்தமை, சிங்கள மன்னர்கள் தென்னிந்திய(பாண்டிய, சோழ), கலிங்க வம்சங்களுடன் கொண்ட திருமண உறவுகள் போன்ற காரணங்களால் இந்துக்கோயில்களும் பண்பாடும் செழிப்படைந்தது. இன்று தமிழர்கள் இந்துக்களாகவும், சிங்களமக்கள் பௌத்தர்களாகவும் இருப்பதைக் கொண்டு முற்பட்ட காலங்களிலும்

அவ்வாறே இம்மக்கள் வாழ்ந்துள்ளனர் என்ற தப்பான கருத்துக்கள் முன்வைக்கப்பட்டுள்ளன. ஆனால் பண்டைய காலத்தில் தமிழர்கள் இந்துக்களாக மட்டுமன்றி அவர்களுள் கணிசமானோர் பௌத்த, சமண, அஜீவக மதங்களை ஆதரித்தவர்களாகவும் இருந்துள்ளனர். இதேபோன்று பொலன்னறுவை இராசதானி காலத்தில் சுதேச சிங்கள மன்னர்களும் மக்களும் இந்துக்களாகவும், இந்துக் கோயில்களையும் பண்பாட்டையும் போற்றிப் பேணியவர்களாகவும் தொடர்ந்தும் நிலைநிறுத்தியவர்களாகவும் இருந்துள்ளனர் என்பதை இவ்வாய்வு நிரூபித்துள்ளது.

**உசாத்துணை நூல்கள்**


1. அனித்தா,ச. 2018. *பொலன்னறுவைக்கால சிங்கள மன்னராட்சியில் இந்துசமயம்.* தமிழியல் ஆய்வு வரலாறும் வளர்ச்சிப் போக்குகளும்- தொகுதி 1, சென்னை.
2. இந்திரபாலா,கா. 1970. *இலங்கையில் திராவிடக்கட்டடக்கலை.* குமரன் புத்தக இல்லம், கொழும்பு.
3. கிருஸ்ணராஜா,செ (தொ.ஆ). 2008. *இலங்கையில் இந்து வெண்கலப் படிமக்கலை மரபகள்(உருவாக்கமும் உருவாக்கியவர்களும்).* குமரன் புத்தக இல்லம், கொழும்பு.
4. சரவணபவன்,க. 2003. *வரலாற்றுத் திருகோணமலை.* திருகோணமலை வெளியீட்டாளர், திருகோணமலை.
5. சிற்றம்பலம்,சி.க. 1996. *ஈழத்து இந்துசமய வரலாறு.* யாழ்ப்பாணப் பல்கலைக்கழக வெளியீடு, திருநெல்வேலி.
6. பத்மநாதன்,சி. 2006. *இலங்கைத் தமிழ் சாசனங்கள்(கி.பி.700 - 1300).* இந்துசமய கலாசார அலுவல்கள் திணைக்களம், கொழும்பு.
7. பத்மநாதன்,சி. 2000. *இலங்கையில் இந்து கலாசாரம் - பகுதி 1.* இந்து சமய பண்பாட்டு அலுவல்கள் திணைக்களம், கொழும்பு.
8. பத்மநாதன்,சி. 2018. *இலங்கையில் இந்து சமயம்.* குமரன் புத்தக இல்லம், கொழும்பு.
9. புஸ்பரட்ணம்,ப. 2017. *இலங்கைத் தமிழர் ஒரு சுருக்க வரலாறு.* தமிழ்கல்விச் சேவை, சுவிற்சர்லாந்து.
10. *Archaeological Survey of Ceylon Annual Report*. 1981, 1906.
11. Geiger,W.(E.d).1953. *Culavamsa*. Ceylon Government Information Department, Colombo.
12. Pathmanathan,S. 1979. *Chola Inscriptions from Manthai*. Thiruketheswara Thirukuda Thirumanjana Malar.
13. Pathmanathan,S. 1987. *Hinduism in Sri Lanka (Circa A.D.1000- 1250) Indian influences on the development of Saivam*. Modern Sri Lanka Studies Vol 2 No 1, University of Peradeniya, Sri Lanka.
14. Swaminathan,K.D. 1960- 1961. *An Inscription of Gajabahu II (One Plate)*. Ceylon Historical Journal Tenth Anniversary Vol 10.
15. *Third Archaeological Excavation Report*, 1982.
16. Veluppillai,A. 1971. *Ceylon Tamil Inscription, Part I*. Peradeniya.